**கோயம்புத்தூர் வணிக வழக்குகள் நீதிமன்றம் (மாவட்ட நீதிபதி நிலை), கோயம்புத்தூர்**

**COS.No. 18 of 2024**

**2025 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16ம் நாள் செவ்வாய்க்கிழமை 1969ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் திரு.கி.ஹரிகரன், எம்.எல்., நீதிபதி, வணிக வழக்குகள் நீதிமன்றம், (மாவட்ட நீதிபதி நிலை), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | PW1- திரு.முருகையன் | **கிராமம்:** | |
| **த.பெ.** | ரவீந்திரன் | **வேலை:** | |
| **வயது** | 43 | **செல்போன் எண்** | |

**முதல் விசாரணை:**

**என் பெயர் முருகையன், வயது 43, த/பெ.ரவீந்திரன். நான் தாக்கல் செய்துள்ள ஆணையுறுதி பத்திரத்தில் உள்ள வாசகங்கள் உண்மை என்றும், சரி என்றும் உறுதியளிக்கிறேன். அதை என் தரப்பு முதல் விசாரணையாக தாக்கல் செய்கிறேன். மேலும், என் தரப்பில் பின்வரும் ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்ய வேண்டுகிறேன்.**

**1) நிறுவனத்தின் பதிவு சான்றிதழ் – ஜெராக்ஸ்**

**2) 10.12.2007 – எனது நிறுவனத்தை பதிவு செய்ததற்கான பதிவு ஒப்புதல் – ஜெராக்ஸ்**

**3) 19.11.2020 – கூட்டாண்மைப் பத்திரம் – நோட்டரி சான்றளிக்கப்பட்ட நகல்**

**4) 17.04.2021 – கொள்முதல் ஆணை – அசல்**

**5) 20.04.2021 – விலைபட்டியல் எண்.10 – அலுவலக நகல்**

6) 29.04.2021 – விலைபட்டியல் எண்.16 – அலுவலக நகல்

7) 09.05.2021 – விலைபட்டியல் எண்.20 – அலுவலக நகல்

8) 09.05.2021 – விலைபட்டியல் எண்.21 – அலுவலக நகல்

9) 12.07.2021 – விலைபட்டியல் எண்.39 – அலுவலக நகல்

10) 06.01.2022 – விலைபட்டியல் எண்.141 – அலுவலக நகல்

11) 12.04.2021 – விலைபட்டியல் – அலுவலக நகல்

12) 01.04.2021 முதல் 31.03.2021 – பேரேட்டு பதிவு கணக்கு அறிக்கை – அலுவலக நகல்

13) 17.02.2023 – பிரதிவாதிகளால் அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பு – அலுவலக நகல்

14) 07.03.2023 – வாதியால் வழங்கப்பட்ட பதில் சட்ட அறிவிப்பு – அலுவலக நகல்

15) 16.06.2023 – கோயம்புத்தூர் மாவட்ட சட்ட பணிகள் சமரச மையத்தால் வழங்கப்பட்ட உத்தரவு – அசல்

மேற்கண்ட நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவணங்களை தங்கள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வாதி தரப்பில் கேட்கப்பட்டது. மேற்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய பரிசீலிக்கப்பட்டது. அவற்றில் நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவண எண்.11 தவிர இதர ஆவணங்கள் குறியீடு செய்ய ஏற்புடைய ஆவணங்கள் என தீர்மானிக்கப்பட்டது. மேலும் நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவணங்கள் 2 மற்றும் 3 ஆவணங்களின் அசல் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு அவற்றை வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நகல் ஆவணங்களுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யக் கோரப்பட்டது. அவை பரிசீலிக்கப்பட்டு இரண்டு மற்றும் மூன்றாவது ஆவணங்களின் அசல் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யப்பட்டு, அவற்றை ஒப்பீடு செய்து அந்த ஆவணங்களும் குறியீடு செய்ய ஏற்கப்பட்டன. இவ்வாறாக நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவண எண்.1 முதல் 10 மற்றும் 12 முதல் 15 ஆகிய ஆவணங்கள் முறையே வா.சா.ஆ.1 முதல் 14 ஆக பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவண ஏற்பு மற்றும் மறுப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆட்சேபனைகளுக்கு உட்பட்டு குறியீடு செய்யப்பட்டது. நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவண எண்.11 புகைப்பட நகலாக இருந்ததால் அந்த ஆவணம் குறியீடு செய்ய ஏற்கப்படவில்லை.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் B.E., MBA படித்துள்ளேன். B.E., Mechanical Engineering படித்துள்ளேன்.

வாதி நிறுவனம் என் தந்தையால் 2003 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. வாதி நிறுவனம் Sri Murugan Foundry and Equipment. எங்களுடைய வர்த்தக பெயர் VME.

Foundry தொழிலுக்கு நான் கடந்த 2004 ஆம் ஆண்டு வந்தேன்.

இந்த வழக்கில் Partnership Act சட்டப்பிரிவுகளை பூர்த்தி செய்யாத காரணத்தினால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல, எங்கள் நிறுவனம் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் தான்.

பிரதிவாதிகளை எனக்கு அவர்கள் எங்கள் நிறுவனத்தில் order கொடுத்தபோது தெரியும், அவர்கள் 2021 ஆம் ஆண்டு order கொடுத்தார்கள்.

Purchase order பிரதிவாதி நிறுவனம் வழங்குவதற்கு முன்னால் பிரதிவாதி மற்றும் வாதி நிறுவனங்களுக்கு இடையே பேச்சுவார்த்தை நடந்து, என்ன செய்ய வேண்டும் என்பதனை தீர்மானித்து பின்னர் தான்

வழங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான், அவர்களுக்கு திரு.ஆர்.சுப்பிரமணியன் என்பவர் ஆலோசகராக இருந்து ஆலோசனை வழங்கி வந்தார், அவருடைய ஆலோசனையின் படி தான் order இறுதி செய்யப்பட்டது.

11.01.2021 அன்று உங்களால் பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்பட்ட proposal இதுதான் என சாட்சியிடம் Ex.B.2 ஆவணம் காண்பிக்கப்பட்டது, சாட்சி அந்த ஆவணத்தை பார்த்தார், அந்த ஆவணத்தை பார்த்து இந்த ஆவணம்தான் கொடுக்கப்பட்டது என்று தெரிவித்தார்.

27.01.2021 அன்று உங்களால் பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்பட்ட proposal இதுதான் என சாட்சியிடம் ஒரு ஆவணம் காண்பிக்கப்பட்டது, சாட்சி அந்த ஆவணத்தைப் பார்த்தார், அந்த ஆவணத்தைப் பார்த்து இந்த ஆவணத்தைத் தாங்கள் கொடுக்கவில்லை என்று சாட்சி தெரிவித்தார்.

27.01.2021 தேதியில் உங்கள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட proposal–ஐ வழக்கிற்காக மறுக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதி உங்களுக்குக் கொடுத்த முழு கொள்முதல் ஆணை இந்த ஆவணம் தான் என சாட்சியிடம் இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டிருந்த EX.B.3 ஆவணம் காண்பிக்கப்பட்டது, சாட்சி அந்த ஆவணத்தை படித்துப் பார்த்து இந்த ஆவணம் தான் கொடுக்கப்பட்டது என்று தெரிவித்தார்.

முழுமையான கொள்முதல் ஆணையின் அடிப்படையில் குறிப்பிட்டிருந்த உதிரி பாகங்களை பிரதிவாதி நிறுவனத்திற்கு நீங்கள் வழங்காத காரணத்தினால் தான் உங்களால் இந்த வழக்கில் முழு கொள்முதல் ஆணை தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

முழுமையான கொள்முதல் ஆணையின்படி பிரதிவாதி நிறுவனத்திற்கு வாதி நிறுவனத்தால் பொருட்களை வழங்குவதற்கு எவ்வளவு தொகை நிர்ணயம் செய்யப்பட்டது என்று சொன்னால் Purchase order இல் சொல்லப்பட்டுள்ளது.

Purchase order இல் ரூபாய் 2,04,00,000/- நிர்ணயம் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

இந்த Purchase order இல் உள்ளவாறு மேற்கண்ட நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு உங்களால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள உதிரி பாகங்களை பிரதிவாதி நிறுவனங்களுக்கு வழங்கி அந்த உதிரிபாகங்களை பிரதிவாதி நிறுவனத்தில் நிறுவிக் கொடுக்க வேண்டும் என்பது உங்களால் ஒப்புக்கொள்ளப்பட்டது என்றால் சரிதான்.

இறுதியாக முழுமையாக நிறுவிக்கொடுப்பது என்பது Successful commission என்பதுதான் என்றால் சரிதான்.

Successful commission செய்யப்படுவதற்கு முன்னால் முழுமையான சோதனை ஓட்டமும் நடந்திருக்கும், நடக்க வேண்டும் என்றால் சரிதான், அவ்வாறு செய்யப்பட்டது.

பிரதிவாதி நிறுவனத்தின் தொழிற்சாலை பற்றியும் அந்த நிறுவனத்தின் எந்திரங்களுக்கான தேவை என்ன என்பது குறித்தும் உங்களுக்கு முழுமையாக தெரியும் என்று சொன்னால் சரிதான், தெரியும்.

பிரதிவாதி நிறுவனம் தவிர இதுவரை எந்தெந்த நிறுவனங்களுக்கு நீங்கள் பிரதிவாதி நிறுவனத்திற்கு வழங்கியது போன்று எந்திரங்களை தயாரித்து வெற்றிகரமாக நிறுவிக் கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் பல நிறுவனங்களுக்கு அவ்வாறு கொடுத்துள்ளோம்.

பிரதிவாதி நிறுவனத்திற்கு நீங்கள் வழங்கிய எந்திரங்கள் போன்று வேறு எந்த நிறுவனங்களுக்கும் வழங்கியது இல்லை, அது போன்று எந்திரங்களை நிறுவிய அனுபவமும் உங்களுக்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல.

நீங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள Ex.A.5 to Ex.A.10 இன்வாய்ஸ்களை பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டார்களா என்றால் ஒப்புக்கொண்டார்கள்.

பிரதிவாதிகளுக்கு நீங்கள் இன்வாய்ஸ்களில் குறிப்பிட்டுள்ள பொருட்களை இதுவரை முழுமையாக supply செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

நீங்கள் பிரதிவாதிகளுக்கு இன்வாய்ஸ்களில் குறிப்பிட்டுள்ள பொருட்களை முழுமையாக supply செய்யாத காரணத்தினால் அவர்கள் நீங்கள் வழங்கிய பொருட்களை ஏற்கவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல, நாங்கள் supply செய்து விட்டோம்.

Ex.A.5 to Ex.A.10 இன்வாய்ஸ்களில் குறிப்பிட்டுள்ள பொருட்களை பிரதிவாதிகளுக்கு முழுமையாக supply செய்து விட்டதாக supply செய்ததைக் காட்ட அதற்குரிய ஆவணங்களான Freight bill, e–way bill, GST returns ஆகியவற்றை இவ்வழக்கில் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் Freight bill இன்வாய்ஸ் உடன் இணைக்கப்பட்டுள்ளது, e–way bill மற்றும் GST returns ஆகியவற்றை தாக்கல் செய்யவில்லை.

பிரதிவாதி நிறுவனத்திற்கு முழுமையாக நீங்கள் இன்வாய்ஸ்களில் உள்ள பொருட்களை சப்ளை செய்யாத காரணத்தினால் தான் Freight bill, e–way bill, GST returns ஆகியவற்றை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

பிரமாண வாக்குமூலம் பத்தி 5 இல் சில இன்வாய்ஸ்களை குறிப்பிட்டுள்ளீர்கள், அதில் 30.04.2021, 25.06.2021 ஆகிய தேதிகளில் உள்ள இன்வாய்ஸ்களை இவ்வழக்கில் நீங்கள் தாக்கல் செய்யவில்லை, இவ்வாறு நீங்கள் தாக்கல் செய்யாமல் இருப்பதற்கு காரணமே அந்த இன்வாய்ஸ்கள் உண்மையில் இல்லாத காரணத்தினால் தான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, அந்த இன்வாய்ஸ்கள் இருக்கும்.

நீங்கள் Purchase order இல் சொன்னவாறு ஒரு மாத காலத்தில் எந்திரங்களை பிரதிவாதி நிறுவனத்திற்கு வழங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, வழங்கியுள்ளோம், delivery time மூன்று மாதம் ஆகும், மூன்று மாத காலத்திற்குள் நாங்கள் வழங்கிவிட்டோம்.

நீங்கள் கூறுவது தவறு, கொள்முதல் ஆணையான purchase order ல் ஒரு மாதம் தான் கால அவகாசம் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் (சாட்சி purchase order பார்க்க வேண்டும் என்று கேட்டதால் Ex.B.3 ஆவணம் சாட்சியிடம் வழங்கப்பட்டு அவர் அதை படித்துப் பார்த்தார்) சரியல்ல, இந்த purchase order எங்களால் வழங்கப்பட்டது அல்ல என்று தெரிவித்தார்.

நீங்கள் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள Ex.A.4 purchase order உங்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, அந்த ஆவணத்திலும் ஒரு மாத காலம் அவகாசம் வழங்கிதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் (சாட்சியிடம் Ex.A.4 ஆவணம் காண்பிக்கப்பட்டது சாட்சி அதை படித்துப் பார்த்தார் ) பின்னர் இது பற்றி தனக்கு தெரியவில்லை என்றும், இது சம்பந்தமாக தனது வழக்கறிஞரைதான் கேட்க வேண்டும் என்று தெரிவித்தார்.

உங்கள் நிறுவனத்தின் மின்னஞ்சல் முகவரி vmefoundary@gmail.com

என்றால் சரிதான்.

04.07.2022 அன்று பிரதிவாதிகளுடன் கலந்து பேசி அப்போது நடந்த பேச்சு வார்த்தையில் பிரதிவாதி நிறுவனத்திற்கு வாதி நிறுவனமான உங்கள் நிறுவனம் வழங்காத எந்திரங்களுக்கு மற்றும் குறைபாடு உடைய எந்திரங்கள் மற்றும் உதிரிபாகங்களுக்கும் வழங்க ஒப்புக்கொண்டு நடந்த கூட்டத்தின் Minutes of meeting இந்த ஆவணம் தான் என்று இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருந்த Ex.B.7 ஆவணம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு சாட்சி அந்த ஆவணத்தை படித்து பார்த்தார், படித்துப் பார்த்துவிட்டு இந்த meeting கிற்கு நான் செல்லவில்லை என்று தெரிவித்தார்.

நீங்கள் பிரதிவாதி நிறுவனத்திற்கு ஒப்புக்கொண்டபடி வழங்காத எந்திரங்களை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கூட்டம் நடந்து, அந்த கூட்டத்தில் கலந்துகொண்டு minutes of meeting ஆவணத்திலும் நீங்கள் கையொப்பமிட்டுக் கொடுத்துவிட்டு தற்போது அந்தக் கூட்டத்தில் நீங்கள் கலந்து கொள்ளவில்லை என்றும், இது பற்றி நீங்கள் வழக்கில் குறிப்பிடாமல் விட்டு விட்டீர்கள் என்றும் சொன்னால் சரியல்ல, தவறு.

இதைத்தொடர்ந்து 13.12.2022 அன்று உங்கள் நிறுவனத்தால் ஒப்புக்கொள்ளப்பட்ட எந்திரங்களை வழங்காமல் விட்டு விட்டீர்கள் என்று மீண்டும் ஒரு கூட்டம் நடந்து, அந்தக் கூட்டத்தில் உங்கள் நிறுவனத்தின் சார்பாக திரு.அன்புராஜ் என்பவர் கலந்து கொண்டு அப்போதும் ஒரு minutes of meeting ஏற்படுத்தப்பட்டுள்ளது, அதையும் இவ்வழக்கில் நீங்கள் குறிப்பிடாமல் விட்டு விட்டீர்கள் என்று சொன்னால் அன்புராஜ் என்ற நபர் எங்கள் நிறுவனத்தில் வேலை பார்க்கவில்லை.

அன்புராஜ் என்ற நபர் உங்கள் நிறுவனத்தின் ஊழியர் தான், தற்போது வழக்கிற்காக அவர் உங்கள் நிறுவன ஊழியர் இல்லை என்று மறுக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

(Ex.B.12) 15.02.2023 தேதியிலும் உங்கள் நிறுவனத்தால் பொருட்கள் வழங்க வேண்டும் என்ற காரணத்திற்காக மீண்டும் ஒரு கூட்டம் நடந்தது, அந்த கூட்டத்திலும் திரு.அன்புராஜ் அவர்கள் கலந்து கொண்டு அப்போதும் ஒரு minutes of meeting எழுதப்பட்டது, அது பற்றியும் இவ்வழக்கில் நீங்கள் குறிப்பிடாமல் விட்டு விட்டீர்கள் என்று சொன்னால் அன்புராஜ் என்பவர் எங்கள் நிறுவன ஊழியரே அல்ல.

முழுமையாக உங்கள் நிறுவனம் ஒப்புக்கொண்டபடி எந்திரங்களை உரிய காலத்தில் வழங்காத காரணத்தினால் தான் அடிக்கடி கால நீட்டிப்பு வாங்கிக் கொண்டு வந்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

உங்கள் நிறுவனத்தின் ஊழியர்களின் பட்டியலை தொழிலாளர் துறைக்கு வழங்கிய விபரங்களை இவ்வழக்கில் உங்களால் வழங்க முடியுமா என்றால் முடியும்.

அசோக் பிரபு என்ற உங்களது sub contractor க்கு நீங்கள் தெரிவித்து உங்களுடைய அறிவுரையின்படி அவர் பிரதிவாதி நிறுவனத்திற்கு வழங்கிய எந்திரங்களை நிறுவி சோதனை ஓட்டம் செய்து கொடுத்ததாகக் குறிப்பிட்டுள்ளீர்கள், அவருக்கு எப்போது தெரிவித்தீர்கள் என்று சொன்னால் purchase order கிடைத்த ஒருவார காலத்தில் தெரிவித்துவிட்டேன்.

அசோக் பிரபுவிற்கு வழங்கிய Sub Contract purchase order களுக்கான இன்வாய்ஸ்கள் எப்போது தயார் செய்யப்பட்டது அல்லது வழங்கப்பட்டது

என்றால் அவர் எப்போது இன்வாய்ஸ் தயார் செய்தார் என்று பார்த்துதான் சொல்ல முடியும்.

Sub contractor இடம் நீங்கள் purchase order கொடுக்கவில்லை, அவர் உங்களுக்கு இன்வாய்ஸ்களும் கொடுக்கவில்லை, வழக்கிற்காக நீங்கள் பொய்யாக கூறுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

Sub contractor இடம் நீங்கள் purchase order கொடுத்ததற்கான தொகையினை எப்போது அவரிடம் செலுத்தினீர்கள் என்று சொன்னால் வங்கிக் கணக்கு அறிக்கையைப் பார்த்துதான் சொல்ல முடியும்.

அதை இவ்வழக்கில் உங்களால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும்.

இன்வாய்ஸ்களுக்கு செலுத்தியதொகைக்கு GST returns தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான், தாக்கல் செய்துள்ளோம்.

திரு.அசோக் பிரபு என்பவருக்கு நீங்கள் sub contract கொடுத்ததாகவும், அவர் பிரதிவாதி நிறுவனத்திற்கு சென்று உங்களால் வழங்கப்பட்ட எந்திரங்களை நிறுவி அதை சோதனை ஓட்டம் செய்து முழுமையாக நிறுவி நிறைவு செய்ததாகவும் கூறுவது பொய்யானது என்று சொன்னால் சரியல்ல.

உண்மையில் திரு.அசோக் பிரபு என்பவர் நீங்கள் கூறியவாறு முழுமையாக பணிகளை மேற்கொண்டு பிரதிவாதி நிறுவனத்தில் எந்திரங்களை நிறுவி முழுமையாக சோதனை ஓட்டம் செய்து கொடுத்து தவறுகள் ஏதும் இல்லை என்று இருந்தால் அதற்குரிய ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்பீர்கள், அவ்வாறு இல்லாத காரணத்தினால் தான் அதற்குரிய ஆவணங்கள் எதையும் இவ்வழக்கில் நீங்கள் தாக்கல் செய்ய முன்வரவில்லை என்று சொன்னால் சரியல்ல .

திரு.அசோக் பிரபு அவர்களால் பிரதிவாதி நிறுவனத்தில் எந்திரங்கள் முழுமையாக நிறுவப்பட்டது என்று பிரதிவாதியிடம் நீங்கள் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, சொல்லியுள்ளோம்.

Ex.B.3 and Ex.A.4 purchase order இரண்டும் ஒரே ஆவணங்கள், Ex.B.3 ஆவணத்தில் Annexures மட்டும் தான் கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல, இரண்டும் வெவ்வேறு ஆவணங்கள்.

Purchase order ன் படி நீங்கள் எந்திரங்களை பிரதிவாதி நிறுவனத்திற்கு வழங்கி அதன்படி எந்திரங்களை நிறுவி முழுமையாக எந்திரங்களை செயல்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு ஆர்வம் காட்டாமல் பணம் பறிப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செயல்பட்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

நீங்கள் கூறுவது போல் முழுமையாக எந்திரங்கள் நிறுவப்பட்டு விட்டது என்று நீங்கள் கூறுவது உண்மையானால் எந்த தேதியில் முழுமையாக உங்களால் பிரதிவாதி நிறுவனத்திற்கு எந்திரங்கள் நிறுவி கொடுக்கப்பட்டது என்றால் கடைசி இன்வாய்ஸ் தேதியில் இருந்து ஒருவார காலத்திற்குள் நாங்கள் முழுமையாக எந்திரங்களை பிரதிவாதி நிறுவனத்தில் நிறுவி செயல்பாட்டிற்குக் கொண்டு வந்துவிட்டோம்.

கடைசி இன்வாய்ஸின் தேதி என்ன என்று உங்களால் கூற முடியுமா என்றால் (சாட்சியிடம் ஆவணப்பட்டியல் காண்பிக்கப்பட்டு ஆவண பட்டியலை சாட்சி பார்த்துவிட்டு) 12.07.2021 தேதியிட்ட இன்வாய்ஸ்க்குப் பிறகு ஒரு வார காலத்தில் எந்திரங்களை நிறுவி கொடுத்ததாக கூறினார்.

நீங்கள் 2023 ஆம் ஆண்டு வரை கூட எந்திரங்களை பிரதிவாதி நிறுவனத்திற்கு முழுமையாக வழங்கவில்லை, அவ்வாறு இருக்கையில் 2021 ஆம் ஆண்டு முழுமையாக எந்திரங்களை

நிறுவிக்கொடுத்துவிட்டீர்கள் என்று கூறுவது வழக்கிற்காக பொய்யாக கூறுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

முழுமையாக பிரதிவாதி நிறுவனத்தில் எந்திரங்களை நிறுவி இயக்கத்திற்கு கொண்டுவராத காரணத்தினால் தான் அவ்வாறு முழுமையாக எந்திரங்கள் நிறுவப்பட்டு இயக்கத்திற்கு வந்துவிட்டது என்பதை காட்டும் விதமாக எந்த ஆவணங்களையும் இந்த வழக்கில் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

எந்திரங்கள் முழுமையாக நிறுவியது பொருத்தும், எந்திரங்கள் முழுமையாக செயல்பாட்டிற்கு வந்தது பொருத்தும் நீங்கள் இவ்வழக்கு வாதுரையிலும் குறிப்பிடாமல் விட்டுவிட்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதி நிறுவனத்திற்கு உரிய காலத்தில் எந்திரங்களை முழுமையாக supply செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

நீங்கள் பிரதிவாதி நிறுவனத்திற்கு வழங்கிய எந்திரங்களில் பல பாகங்கள் பழுதடைந்தும், செயல்படாமலும் இருந்தது என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதி நிறுவனத்திற்கு வழங்காத பொருட்களுக்கும் சேர்த்து தான் இன்வாய்ஸில் குறிப்பிட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதி நிறுவனத்திற்கு வழங்கிய ஒரு சில பொருட்களுக்கும் கூட உரிய நபர்களை அனுப்பி அதை நிறுவிக் கொடுப்பதற்குக்கூட நீங்கள் முன்வரவில்லை என்று சொன்னால் சரியல்ல.

Purchase order இல் உள்ள படி நீங்கள் பொருட்களை வழங்காமலும், இயந்திரங்களை நிறுவி கொடுக்காமலும் இருந்ததால் பிரதிவாதிகளுக்கு உரிய காலத்தில் திட்டமிட்டபடி தங்கள் தயாரிப்புகளை மேற்கொள்ள

முடியாமல் நஷ்டம் ஏற்படுவதற்கு காரணமாக இருந்துள்ளீர்கள் என்று சொன்னால் தவறு.

நீங்கள் வழங்கிய பொருட்களுக்கும் கூடுதலாக பிரதிவாதிகள் உங்களுக்கு இதுவரை பணம் செலுத்திய உள்ளார்கள் என்று சொன்னால் தவறு.

உரிய உதிரி பாகங்களை நீங்கள் வழங்காத காரணத்தினால் பிரதிவாதிகள் தங்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள Ex.B.17 ஆவணத்தில் உள்ளபடி கூடுதலாக உதிரிபாகங்களை ரூபாய் 74 லட்சத்திற்கும் கூடுதலாக வாங்கியுள்ளார்கள் (சாட்சியிடம் அந்த ஆவணம் காண்பிக்கப்பட்டது, சாட்சி அந்த ஆவணத்தைப் பார்த்தார் ) என்றால் இந்த ஆவணம் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டது.

இதுபோன்று நீங்கள் வழங்குவதாக ஒப்புக்கொண்ட பாகங்களையும் உதிரி பாகங்களையும் பிரதிவாதி நிறுவனத்திற்கு வழங்காமல் விட்டுவிட்ட காரணத்தினால் பிரதிவாதிகள் அந்தப் பொருட்களை வெளியிலிருந்து தங்கள் நிறுவனத்திற்கு வாங்கியதால் பல லட்ச ரூபாய் அவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

Purchase order இல் சொல்லியபடி பணிகளை நீங்கள் முடித்துக் கொடுக்காத காரணத்தினால் உங்கள் நிறுவனத்திற்கு வழங்கிய தொகையும், உங்கள் நிறுவனத்தில் இருந்து பிரதிவாதி நிறுவனத்திற்கு பணிகள் மேற்கொள்வதற்காக சென்ற நபர்களுக்கு செலவு செய்த தொகையும் பிரதிவாதிக்கு முழுமையான நஷ்டம் என்று சொன்னால் சரியல்ல.

Purchase order இல் உள்ளபடி பொருட்களை பிரதிவாதி நிறுவனத்திற்கு வழங்காமல் பின்னர் உங்களிடம் அழைத்துக்

கேட்டபோதும் கூட தான் சரி செய்து கொடுத்து விடுவதாக நீங்கள் தொடர்ந்து உறுதி கூறி வந்து அதைக் கேட்டு பிரதிவாதிகள் காத்திருந்தும் அவர்களுக்கான பணிகளை நீங்கள் முழுமையாக முடித்துக் கொடுக்காமல் தொடர்ந்து கால தாமதம் செய்த காரணத்தினால் பிரதிவாதிகள் தங்கள் நிறுவனத்தில் பொருட்களை தயாரிக்கும் பணியானது மேலும் காலதாமதம் அடைந்து அதனால் பிரதிவாதி நிறுவனத்திற்கு பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

(Ex.B.13) 17.02.2023 அன்று பிரதிவாதிகள் உங்களிடம் மேற்கண்ட குறைகளை சுட்டிக்காட்டி நஷ்டஈடு கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்ததால் அதிலிருந்து தப்புவதற்காக நீங்கள் கடந்த (Ex.B.14) 07.03.2023 தேதியில் பொய்யான ஒரு அறிவிப்பைக் கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதிகள் தாங்கள் தாக்கல் செய்துள்ள COS.No.7/2025 வழக்கில் கோரியுள்ள பரிகாரமானது அவர்களுக்குக் கிடைக்கத்தக்கது என்று சொன்னால் தவறு.

உங்கள் முதல் விசாரணை தெரிவித்துள்ள விவரங்கள் முற்றிலும் தவறானது, பொய்யானது, நீங்கள் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது தள்ளுபடி ஆகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை நிறைவுற்றது.

Sd/–K.Hariharan

Judge,
Commercial Court
(District Judge Cadre),
Coimbatore.